டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 17.11.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 125 | Madurai | Online Edition

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு மிதிவண்டி பயணத்தை அதிகரிக்க வேண்டும்

ஐநா பருவநிலை மாநாட்டில் இந்தியா வலியுறுத்தல்



புது தில்லி, நவ.16

துருக்கியின் அந்தாலியா நகரில் ஐ.நா. பருவநிலை மாநாடு (சிஓபி31) நடைபெறுகிறது. இதில் இந்தியாவில் 'ஃபிட் இந்தியா' இயக்கத்தின் சார்பில் நடத்தப்படும் ஞாயிற்று கிழமைகளில் மிதிவண்டிப் பயண இயக்கம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், மக்களின் உடல் நலத்தை மேம்படுத்தவும் மிதிவண்டிப் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தியது.

2024 டிசம்பர் 22-ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த மிதிவண்டிப் பயண இயக்கம், இதுவரை ஒவ்வொரு ஞாயிறும் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. இந்தியா முழுவதும் 30,000க்கும் மேற்பட்ட இடங்களில் சுமார் 37 லட்சம் பேர் இதில் பங்கேற்றுள்ளனர். உலக மிதிவண்டி தினத்தன்று ஒரு லட்சம் பேர் பங்கேற்பார்கள் என எதிர் பார்க்கப்பட்ட நிலையில், சுமார் 4 லட்சம் பேர் கலந்து கொண்டனர்.

மிதிவண்டிப் பயணத்தை அன்றாடப் பழக்கமாக மாற்றுவதன் மூலம் வாகனப் புகையால் ஏற்படும் காற்று மாசுபாட்டையும் கரிய மில வாயு வெளியேற்றத்தையும் குறைக்க முடியும் என ஐநா பருவ-நிலை மாநாட்டில் இந்தியா தெரிவித்தது. அடுத்த 12 மாதங் களுக்குள் ஒவ்வொரு நாடும் குறைந்தது ஒரு சமூக சைக்கிள் பயண நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என இதில் பேசிய ஃபிட் இந்தியா இயக்கத்தின் செயல் இயக்குநர் அமர்ஜோதி அழைப்பு விடுத்தார். நவம்பர் 29-ஆம் தேதி இந்தியாவில் இந்த இயக்கத்தின் 100-வது பயணம் நடைபெறவுள்ளது எனவும், இதற்கான வழிகாட்டிக் கையேட்டையும் உலக நாடுகளுடன் இந்தியா பகிரவுள்ளது என்றும் அவர் கூறினார்.

விதைப்பரிசோதனை நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட துணை ஆட்சியர் (பயிற்சி)



காஞ்சிபுரம், நவ.16

காஞ்சிபுரம், விதைப்பரிசோதனை நிலையத்தினை காஞ்சிபுரம் துணை ஆட்சியர் (பயிற்சி) திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது காஞ்சிபுரம், விதைப்பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர் பால பாரதி, விதைகளின் முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிறரக கலப்பு ஆகிய பரிசோதனை செயல்பாடுகளின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்தார். மேலும், இந்த ஆய்வின் போது காஞ்சிபுரம் துணை ஆட்சியர் (பயிற்சி) விதையின் தரத்தினை உறுதி செய்தார்.

விதைப்பரிசோதனை முடிவுகளை தெரிந்து தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்கவும் அதன் மூலம் அதிக மகசூல் பெற்று நல்ல வருவாய் பெறவும் விதைப்பரிசோதனைநிலையத்தை பயன் படுத்திக் கொள்ள விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- ஆய்வுக் கட்டணமாக செலுத்தி விதையின் புறத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் பிறரக கலப்பு ஆகியவற்றை தெரிந்து கொள்ளலாம்.

கால்நடை மருத்துவ முகாம் நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



சேலம், நவ.16

கிராமத்தில் தங்கி பயிற்சி பெரும் திட்டத்தின் கீழ் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மை கல்லூரி, பெரம்பலூர் மாணவர்கள் வீரபாண்டி வட்டம், சேலம் மாவட்டத்தில் உள்ள புத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவர் வெங்கடேஸ் வரனின் உதவியுடன் கால்நடை முகாம் நடத்தினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வேளாண் உயிரியல் இடுப்பொருட்கள் தொழில் முனைவோர்க்கான திறன் மேம்பாட்டு இரண்டு நாள் பயிற்சி



மதுரை, நவ.16

வேளாண் உயிரியல் இடுப்பொருட்கள் தொழில் முனைவோர்க்கான திறன் மேம்பாட்டு இரண்டு நாள் பயிற்சி, மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் மதுரை வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையினர், மதுரை வேளாண்மை அறிவியல் நிலையம், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் கி.சுரேஷ் மற்றும் தோட்டக்கலை இணை பேராசிரியர் முனைவர் ப.அருள்அரசு பங்கேற்று இயற்கை விவசாயம் பற்றியும் மற்றும் அதன் இடுப்பொருட்கள் உற்பத்தி பற்றியும் வகுப்பெடுத்தனர். இந்த பயிற்சியில் இயற்கை விவசாயத்தில் மண் மற்றும் நீர் மேலாண்மை, விதைத்தேர்வு மற்றும் விதை நேர்த்தி, ஜீவா மிர்தம், பீஜாமிர்தம் மற்றும் பஞ்சகாவ்யா போன்ற இடு பொருட்கள் தயாரித்தல் குறித்து செயல் விளக்கம் அளித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும் இயற்கை முறையில் பூச்சி நோய்களை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் ஊண் விழுங்கிகளை ஆய்வகத்தில் உற்பத்தி செய்வது பற்றியும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சியில் பங்கு பெற்றவர்கள் இயற்கை விவசாயம் குறித்து தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். பயிற்சியில் பங்கு பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. கே வி கே மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் கி.சுரேஷ் மற்றும் பெங்களூரு அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை மையத்தின் உதவி இயக்குனர் முனைவர் பிரியங்கா பிரதான் ஆகியோரின் நன்றி உரையுடன் நிறைவடைந்தது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

மைக்ரோகிரீன்ஸ்–குறைந்த இடத்தில் அதிக மகசூல் சிறந்த வருமானம் தரும் சிறுதொழில்!

அறிமுகம்



மைக்ரோகிரீன்ஸ் (Microgreens) என்பது காய்கறிகள் மற்றும் கீரை வகைகளின் விதைகள் முளைத்த பின்னர், முதல் இரண்டு இலைகள் முழுமையாக விரியும் இளம் தாவர நிலையாகும். இவை பொதுவாக விதைத்த 7 முதல் 14 நாட்களுக்குள் அறுவடை செய்யப் படுகின்றன. குறைந்த இடம், குறைந்த நீர் மற்றும் குறுகிய காலத்தில் அதிக ஊட்டச்சத்து நிறைந்த உணவை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு நவீன நகர்ப்புற வேளாண்மை முறையாக மைக்ரோ கிரீன்ஸ் விளங்குகிறது. முள்ளங்கி, கடுகு, பச்சைப்பயறு, கொண்டை கடலை, வெந்தயம், பீட்ரூட், சூரியகாந்தி, ப்ரோக்கோலி போன்ற பல்வேறு பயிர்களின் விதைகளைப் பயன்படுத்தி மைக்ரோகிரீன்ஸ் உற்பத்தி செய்யலாம். இவை உணவிற்கு அழகையும், சுவை யையும், ஊட்டச்சத்தையும் சேர்க்கின்றன. குறிப்பாக இடப்பற்றாக் குறை உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டிலேயே வளர்க்க ஏற்றதாக உள்ளது.

மைக்ரோகிரீன்ஸின் ஊட்டச்சத்து மதிப்புகள்மைக்ரோகிரீன்ஸில் வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் இயற்கையான ஆக்ஸிஜனேற் றப் பொருட்கள் (Antioxidants) காணப்படுகின்றன. குறிப்பாக வைட்ட மின் A, C, E, K மற்றும் இரும்பு, கால்சியம், பொட்டாசியம் போன்ற ஊட்டச்சத்துக்கள் பயிர் வகையைப் பொறுத்து காணப்படுகின்றன.

இளம் தாவரங்களின் இலைகள் மற்றும் தண்டுகளில் பல்வேறு உயிர்வேதிப் பொருட்கள் காணப்படுகின்றன. இதனால் மைக்ரோ கிரீன்ஸ் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

மைக்ரோகிரீன்ஸின் பொருளாதார முக்கியத்துவம்

மைக்ரோகிரீன்ஸ் உற்பத்திக்கு அதிகளவு நிலம் தேவையில்லை. சிறிய அறை, மாடித்தோட்டம், பால்கனி போன்ற இடங்களிலேயே இதனை உற்பத்தி செய்யலாம். குறுகிய காலத்தில் அறுவடை செய்யப்படுவதால், குறைந்த முதலீட்டில் தொடர்ந்து உற்பத்தி மேற்கொள்ள முடியும்.

உணவகங்கள், நட்சத்திர விடுதிகள், சூப்பர் மார்க்கெட்டுகள், ஆரோக்கிய உணவகங்கள் மற்றும் நகர்ப்புற நுகர்வோர் மத்தியில்

மைக்ரோகிரீன்ஸிற்கு தேவை உருவாகி வருகிறது. எனவே இளைஞர்கள் மற்றும் பெண்கள் சிறு தொழிலாக இதனைத் தொடங்கி வருமானம் ஈட்டலாம்.



மைக்ரோகிரீன்ஸ் வளர்க்கும் முறை

மைக்ரோகிரீன்ஸ் வளர்ப்பதற்கு மண் அல்லது தென்னை நார் கழிவு (Cocopeat) போன்ற வளர் ஊடகங்களைப் பயன்படுத்தலாம்.

1. விதைத் தேர்வு

முள்ளங்கி, கடுகு, வெந்தயம், பச்சைப்பயறு, சூரியகாந்தி, ப்ரோக் கோலி போன்ற பயிர்களின் தரமான, முளைப்புத்திறன் கொண்ட, பூச்சிக்கொல்லி மருந்து பூசப்படாத விதைகளைத் தேர்வு செய்ய வேண்டும்.

2. விதைகளை ஊறவைத்தல்

பயிர் வகையைப் பொறுத்து விதைகளை 4 முதல் 8 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கலாம். சிறிய விதைகளுக்கு ஊறவைத்தல் அவசியமில்லை.

3. வளர் ஊடகம் தயாரித்தல்

துளைகள் கொண்ட தட்டுகளில் தென்னை நார் கழிவு அல்லது சுத்தமான வளர் ஊடகத்தை 2 முதல் 3 செ.மீ. உயரத்திற்கு நிரப்ப வேண்டும். அதன் மேற்பரப்பைச் சமப்படுத்த வேண்டும்.

4. விதைத்தல்

தேர்வு செய்யப்பட்ட விதைகளை தட்டின் மேற்பரப்பில் சீராகத் தூவ வேண்டும். விதைகள் ஒன்றின் மீது ஒன்று அதிகமாகக் குவியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

5. நீர் மேலாண்மை

விதைத்த பிறகு தெளிப்பான் (Sprayer) மூலம் லேசாகத் தண்ணீர் தெளிக்க வேண்டும். வளர் ஊடகம் ஈரப்பதத்துடன் இருக்க வேண்டும். அதிகப்படியான நீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

6. ஒளி மேலாண்மை

விதைகள் முளைத்த பின்னர் போதுமான மறைமுக சூரிய ஒளி அல்லது பொருத்தமான செயற்கை ஒளி கிடைக்குமாறு வைக்க வேண்டும். நல்ல காற்றோட்டம் அவசியம்.

7. அறுவடை செய்தல்

விதைத்த 7 முதல் 14 நாட்களுக்குள், பயிர் வகையைப் பொறுத்து

முதல் இரண்டு இலைகள் நன்கு விரிந்த நிலையில், சுத்தமான கத்தரிக்கோலால் தண்டுகளை வெட்டி அறுவடை செய்யலாம்.

முடிவுரை

குறைந்த இடம், குறைந்த நீர், குறுகிய காலம் மற்றும் குறைந்த முதலீட்டில் ஊட்டச்சத்து நிறைந்த உணவை உற்பத்தி செய்ய உதவும் சிறந்த நவீன வேளாண்மை முறையாக மைக்ரோகிரீன்ஸ் விளங்குகிறது. அதிகரித்து வரும் ஆரோக்கிய உணவுத் தேவையைப் பயன்படுத்தி விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் இதனை ஒரு சிறந்த சிறுதொழிலாக மேற்கொள்ளலாம். எனவே 'சிறிய இடத்தில் சிறந்த விளைச்சல், குறுகிய காலத்தில் நிறைந்த ஊட்டச்சத்து' என்ற அடிப்படையில் மைக்ரோகிரீன்ஸ் சாகுபடியை ஊக்குவிப்பது இன்றைய காலத்தின் தேவையாகும்.

தகவல் : ***ரா.துர்காதேவி, நான்காம் ஆண்டு, இளநிலை வேளாண்மை மாணவி & டாக்டர் அ.ஸ்ரீ.அர்ச்சனா, உதவிப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், NMV பல்கலைக்கழகம், அருப்புக் கோட்டை – 626 101, விருதுநகர் மாவட்டம்.***

நெல் நாற்றுகளுக்கு Bacillus subtilis மூலம் வேர் நேர்த்தி செயல்விளக்களித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருவாரூர், நவ.16

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், தலையாமங்கலம் கிராமத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், நெற்பயிரில் நன்மை தரும் நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி பயிர் வளர்ச்சியை மேம்படுத்தும் உயிரியல் தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, Bacillus subtilis என்ற நன்மை தரும் நுண்ணுயிரியைப் பயன்படுத்தி நெல் நாற்றுகளின் வேர்களை நேர்த்தி செய்யும் (See ling Root Dip) முறையின் முக்கியத்துவம், அதன் செயல்பாடு, தயாரிப்பு முறை மற்றும் நாற்று நடவுக்கு முன்பு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து மாணவர்கள் நேரடியாக செயல்விளக்கம் அளித்தனர்.



இம்முறையானது வேர்ப்பகுதியில் நன்மை தரும் நுண்ணுயிரிகளின் நிலைபெறுதலுக்கு உதவி செய்து, மண் மூலம் பரவும் சில நோய்களைத் தடுப்பதற்கும், ஆரோக்கியமான பயிர் வளர்ச்சிக்கும் துணை புரிகிறது. இரசாயன உள்ளீடுகளின் தேவையைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிரியல் பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தை வலியுறுத்திய இந்நிகழ்ச்சிக்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.



இப்கோ நானோ யூரியா பிளஸ் - விவசாயத்தின் புதிய சாதனை!

சென்னை, நவ.16

விவசாயத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் விவசாயி களுக்காக, நவீன நானோ தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட திரவ உரம் இப்கோ நானோ யூரியா பிளஸ், இதில் 20% தழைச்சத்து அடங்கியுள்ளது. மிகச்சிறிய அளவில் அதிக விளைச்சலை வழங்கக்கூடிய திறன் கொண்டது. இத்திரவ உரம் இலைவழி தெளிப்பு முறையில் 1 லிட்டர் நீருக்கு 5 மில்லி அளவில் பயன்படுத்தலாம்.

நெல், மக்காச்சோளம், சிறுதானியங்கள் போன்ற தானியப் பயிர்கள், உளுந்து, துவரை, கொண்டை கடலை, பச்சை பயறு போன்ற பயறு வகைகள், நிலக்கடலை, எள், சூரியகாந்தி உள்ளிட்ட எண்ணெய்வித்து பயிர்கள், காய்கறிகள், பருத்தி, கரும்பு, பழ வகைகள், பூப்பயிர்கள், தேயிலை மற்றும் தோட்டப் பயிர்கள் என அனைத்து விதமான பயிர்களுக்கும் இது ஏற்றதாகும்.

மேலும் தழைச்சத்து குறைவால் பாதிக்கப்படும் பயிர்களின் வளர்ச்சி முழுமையாக சீராகும். குறைந்த செலவில், உயர்ந்த விளைச்சலை நோக்கி விவசாயிகள் பயணிக்க நானோ உரங்கள் பாதுகாப்பான வழியாகும். குருணை யூரியாவைவிட சிறந்த மாற்றாகவும், எளிதில் எடுத்துச் செல்லும் வகையிலும், சேமிக்க வசதியாகவும் இருக்கின்றது.

இப்கோ நானோ யூரியா பிளஸ் 500 மில்லி பாட்டிலின் விலை ரூ.225 மட்டுமே.

இது ஒவ்வொரு விவசாயியின் கையில் இருக்க வேண்டிய ஒரு நவீன உரம்.



சமச்சீர் உரப்பயன்பாடு & உரப்பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி



கிருஷ்ணகிரி, நவ.16

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம், சின்ன மட்டாரப்பள்ளி கிராமத்தில் சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் செந்தில் குமார் தலைமை தாங்கி பயிற்சியில் கலந்து கொண்ட அனை வரையும் வரவேற்று பேசினார். வேளாண்மை அலுவலர் பவித்ரா பேசுகையில் பசுந்தாள் உரங்களான சணப்பை, தக்கைப்பூண்டு போன்ற பயிர்களை வளர்த்து, பூக்கும் பருவத்திற்கு முன் மண்ணில் உழுதுதல் வேண்டும் என்றும் உயிர் உரங்களான அசோஸ் பைரில்லம், பாஸ்போபாக்டிரியா, அசோட்டோபாக்டர் போன்ற வற்றை பரிந்துரைக்கப்பட்ட முறையில் பாதுகாத்தல், அறுவடைக் குப்பின் கிடைக்கும் தாவர கழிவுகளை எரிக்காமல் மக்கச் செய்து மண்ணில் சேர்த்தல் என்றும் தொழில் நுட்பங்களை எடுத்து கூறினார். வேளாண்மை அறிவியல் நிலையம் பேராசிரியர் குணசேகர், சமச்சீரான உரப்பயன்பாடு என்பது மண் பரிசோதனை களின் அடிப்படையில் பேரூட்டச் சத்துக்களையும், நுண்ணூட்டச் சத்துக்களையும் சரியான அளவிலும் விகிதத்திலும் இடுவதாகும். உரப்பயன்பாட்டுத் திறன் என்பது இடப்பட்ட ஊட்டச்சத்துக்களில் எவ்வளவு பயிரால் உண்மையில் உறிஞ்சப்படுகிறது என்பதை அளவிடுகிறது. சமச்சீரான பயன்பாடு எந்தவொரு ஊட்டச்சத்தும் விடுபடாமல் தாவர வளர்ச்சியைத் தடுக்காமலும் வீணாக்காமலும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் உரப்பயன்பாட்டுத் திறனை நேரடியாக அதிகரிக்கிறது. மண் பரிசோதனை அடிப்படையில் ஊட்டச்சத்துக்களை இடவும். சரியான விகிதங்கள் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் (NPK) மற்றும் துத்தநாகம் அல்லது போரான் போன்ற நுண்ணூட்டச் சத்துக்களை சரியான விகிதங் களில் வழங்குங்கள். பயிரின் குறிப்பிட்ட வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ற ஊட்டச்சத்துக்களை இடவும். உரங்களை மேற்பரப்பில் பரவலாகப் பரப்புவதற்குப் பதிலாக வேர்ப்பகுதிக்கு அருகில்இடவும். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பரசு, உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம், கிரிஜா ஆகியோர் செய்திருந்தனர்.

கரும்பு அறுவடைக்கு பிந்தைய கையாளுதல் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு



திருச்சி, நவ.16

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறைஎழில், ஜெ.ஜெய பிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (யூபுநிசி) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு உட்பிரிவாக, கரும்பு சாகுபடியில் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கரும்பு அறுவடை செய்த பிறகு அதன் தரம் மற்றும் சர்க்கரைச் சத்து குறையாமல் பாதுகாப்பதற்கு முறையான போக்குவரத்து, கையாளுதல் மற்றும் சேமிப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும். அறுவடை செய்யப்பட்ட கரும்புகளில் உள்ள காய்ந்த இலைகள் மற்றும் தேவையற்ற பகுதிகளை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும். பின்னர் கரும்புகளை சரியான அளவில் அடுக்கி, போக்குவரத்தின்போது சேதமடையாமல் பாதுகாப்பாகக் கட்டி எடுத்துச் செல்ல வேண்டும். கரும்புகளை நீண்ட நேரம் வயலில் அல்லது வாகனங்களில் வைத்திருக்காமல் விரைவாக சர்க்கரை ஆலைக்கு அனுப்ப வேண்டும்.

கரும்புகளைப் பொதியிடும் (ணிழிஉவழிஆஷ்ஜஆ) போது சரியான முறையில் அடுக்கி, பாதுகாப்பாகக் கட்ட வேண்டும். சேமிப்பின்போது நேரடி வெயில் மற்றும் அதிக வெப்பத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். நீண்ட நேரம் சேமிப்பதைத் தவிர்த்து விரைவாக அரவை செய்வது சர்க்கரைச் சத்து இழப்பைக் குறைக்க உதவும். எனவே, விவசாயிகள் அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பங்களான சுத்தம் செய்தல், போக்குவரத்து, பொதியிடுதல் மற்றும் சேமிப்பு முறைகளைக் கடைப்பிடித்து கரும்பின் தரத்தையும் வருமானத்தையும் அதிகரிக்க வேண்டும் என வேளாண் மாணவிகளால் அறிவுருத்தப்பட்டது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

பயிர் கடன் தள்ளுபடியில் கூடுதல் சலுகைகள் பற்றி தெரியுமா?



தமிழக அரசு அரசாணை எண் 89, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாது காப்புத் துறை (சிசி1) நாள் 6.11,2026ன்படி, 2026 பயிர்க் கடன் தள்ளுபடித் திட்டத்தை விரிவுபடுத்தி தமிழக அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது.

அதனுடைய சிறப்பு அம்சங்கள்?

1) இதன்படி பயிர்க்கடன் தள்ளுபடிக்கு தகுதியான கடன் களுக்கான கால வரம்பு 1.5.2025முதல் 28.2.26 வரை என்பதிலிருந்து 31.3.2026 வரை நீட்டிக்க பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2) தகுதியான அனைத்து விவசாயிகளுக்கும் பாகுபாடின்றி 75000 வரை பயிர்க்கடன் தள்ளுபடி வழங்க உத்தரவிடப் பட்டுள்ளது.

3) 19.6.2026க்கு முன்னர் கடன் தொகையை நிலுவை யின்றி முழுமையாக செலுத்திய விவசாயிகளுக்கு தள்ளுபடி வழங்கப்படும்.

4) மாதம் 10,000க்கும் குறைவாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர் களால் பெறப்பட்ட தகுதியான பயிர்க்கடன் களுக்கு தள்ளுபடி பொருந்தும்.

5) ஒரே விவசாயி ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுறவு சங்கங் களில், அல்லது ஒரே சங்கத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பயிர் கடன்கள் பெற்றிருந்தால் அதிக பட்ச தள்ளுபடியான கடனுக்கு மட்டுமே தள்ளுபடி வழங்கப்படும்.

அதே போல ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப் பினர்கள் பயிர்க்கடன் பெற்றிருந்தால், அதிகபட்ச தள்ளுபடிக்கு

தகுதியான ஒரு கடனுக்கு மட்டுமே தள்ளுபடி வழங்கப்படும்.

6) மேலும் 6.11.2026க்கு முன்னர் தவணை தவறி பகுதி தள்ளுபடி பெற்ற விவசாயிகள் தங்களுடைய கடன் நிலுவையை 30.11.2026க்குள் முழுமையாக செலுத்தினால், அக்கடனுக்குரிய தள்ளுபடி தொகை 75000வரை விடுவிக்கப்படுவதுடன், அதற்குரிய வட்டியை அரசே செலுத்தும்.

7) அதே போன்று 7.11.2026 முதல் 30.11.2026 வரை கடன் களுக்கும் பகுதி தள்ளுபடி பெற்ற விவசாயிகள் 30.11.2026க் கும் கடனை நிலுவையின்றி செலுத்தினால் மேற்கண்ட சலுகை வழங்கப்படும்.

8) 30.11.2026க்கு பின்னர் தவணைக் காலம் வரும் கடன்களை உரிய தவணைத் தேதிக்குள் நிலுவையின்றி செலுத்தும் விவசாயிகளுக்கு தள்ளுபடித் தொகை விடுவிக்கப் பட்டு, வட்டியின்றிக்கடன் நேர் செய்யப்படும்.

எனவே 2026 பயிர்கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ் பகுதித் தள்ளுபடி பெற்றுள்ள விவசாயிகள், தமிழக அரசின் இந்த சிறப்பு சலுகையை பயன்படுத்தி தங்களது கடன் நிலுவையை செலுத்தி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



இரும்புபாளையம் கிராமத்தில் பண்ணைக் கழிவு மேலாண்மை குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி!

நாமக்கல், நவ.16



தனலட்சுமி சீனிவாசன் வேளாண் கல்லூரி பெரம்பலூர் சேர்ந்த இறுதி ஆண்டு வேளாண் மாணவிகள் எட்டு பேர், (கோபிகா, ஞான ஸ்ரீ, கோகுலப் பிரியா, குருசந்திர பிரபா, ஹபிபா, ஜெயஸ்ரீ, ஹேமலதா, ஜெர்லின் ஜிது) வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரத்தில் உள்ள இரும்புபாளையம் கிராமத்தில் விவசாயிகளுக்கான பண்ணைக் கழிவு மேலாண்மை (Farm Waste Management) குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், விவசாயப் பணிகளின் போது உருவாகும் பல்வேறு வகையான பண்ணைக் கழிவுகளை வீணாக்காமல் பயனுள்ள வகையில் மறுசுழற்சி செய்து, நிலையான வேளாண்மையை ஊக்குவிப்பதாகும்.

நிகழ்ச்சியில் பயிர் அறுவடைக்குப் பின்னர் கிடைக்கும் தண்டுகள், இலைகள், காய்ந்த சருகுகள், களைகள், கால்நடைக் கழிவுகள் மற்றும் பிறகரிமக் கழிவுகளை முறையாகச் சேகரித்து மேலாண்மை செய்வதன் அவசியம் குறித்து மாணவிகள் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். மேலும், விவசாயக் கழிவுகளை வயல்களில் எரிப்பதால் ஏற்படும் மண் வள இழப்பு, நுண்ணுயிர்களின் அழிவு, காற்று மாசுபாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தொடர்ந்து, பண்ணைக் கழிவுகளைப் பயன்படுத்தி இயற்கை உரம் தயாரிக்கும் முறைகள், மட்க உரம் தயாரித்தல் மற்றும் பயிர்க் கழிவுகளை மண்ணில் மட்கச் செய்து இயற்கை வளமாக மாற்றுதல் போன்ற பயனுள்ள மேலாண்மை முறைகள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இம்முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வேளாண் கழிவுகளை மதிப்புக் கூட்டப்பட்ட வளங்களாக மாற்ற முடியும் என்பதையும் விளக்கினர். மேலும் பண்ணைக்கழிவுகளை முறையாக மறுசுழற்சி செய்வதன் மூலம் மண்ணின் கரிமப் பொருள் அளவை அதிகரிக்கவும், மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனை மேம்படுத்தவும், மண் நுண்ணுயிர்களின் செயல்பாட்டை ஊக்குவிக்கவும் முடியும் என மாணவிகள் எடுத்துரைத்தனர். இதன் மூலம் ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து சாகுபடி செலவை கட்டுப்படுத்தி, விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விளக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகள் பண்ணைக் கழிவுகளைப் பயனுள்ள வேளாண் உள்ளீடுகளாக மாற்றுவதன் முக்கியத் துவத்தை அறிந்து கொண்டனர்.

மேலும், சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான வேளாண் நடைமுறைகளைப் பின்பற்று வதற்கான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

இத்தகைய செயல்விளக்க நிகழ்ச்சிகள் மூலம் வேளாண் மாணவர்கள் தங்களது தொழில்நுட்ப அறிவை விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்வதுடன், கிராமப்புற வேளாண் வளர்ச்சிக்கும் பங்களித்து வருகின்றனர்.



விவசாயிகள் மானிய உரம், பயிர் கடன் பெற உழவர் அடையாள எண் கட்டாயம்

சேலம், நவ.16

சேலம் மாவட்டம், அயோத்தியபட்டிணம் வட்டாரத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அடையாள எண் வழங்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இனிவரும் காலங்களில் மானிய விலையில் உரங்கள் பெறுவதற்கு உழவர் அடையாள எண் (Farmer ID) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து மானிய திட்டங்கள், பயிர் காப்பீடு சலுகைகள் மற்றும் பயிர் கடன் பெறுவதற்கு இந்த அடையாள எண் கட்டாயம் ஆகும்.

எனவே எதிர்வரும் ஒவ்வொரு விஏஓ அலுவலகத்தில் நடைபெறும் முகாமில் விவசாயிகள் அடையாள எண் பெற தங்களுடைய ஆதார் அட்டை நகல், கம்ப்யூட்டர் பட்டா நகல் மற்றும் ஆதாரில் பதிவு செய்த செல்போனையும் கொண்டுவந்து, உதவி வேளாண்மை அலுவலர்கள், உதவி தோட்டக்கலை அலுவலர்கள், அட்மா திட்ட அலுவலர்கள் ஆகியோரிடம் விவரங்களை பதிவு செய்து, அடை யாள எண் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது.

கூடுதலாக, அருகில் உள்ள பொது சேவை மையத்திலும் பதிவு மேற்கொண்டு பயன் பெறலாம் என்றும், ஏற்கனவே அடையாள எண் பெற்று சர்வே எண் மற்றும் உட்பிரிவு எண் விடுபட்டு இருந்தால் அதையும் இணைத்துக்கொள்ளலாம் என்று அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சண்முகப்பிரியா விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

நவீன நெல் அரவை ஆலையை பார்வையிட்ட வேளாண் மாணவர்கள்

பெரம்பலூர், நவ.16

பெரம்பலூர் மாவட்டம், அம்மா பாளையம் கிராமத்தில், திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவர்கள், சு.பாபு, மு. தரணி தரன், கா.தருண், செ.கபீர்தாஸ், கு.ராகுல், மு.ரோஹித், ர.சாய்ராம், பா.சஷிகாந்த், சு.நிர்மல்குமார்,



கோ.சிவக்குமார் மற்றும் தி.தினகரன் ஆகியோர், கிராம தங்கல் திட்டம் (RAWE) மூலமாக களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் அங்கமாக, மாணவர்கள் நவீன நெல் அறவை தொழிற் சாலைக்கு சென்று தொழிற் பயிற்சி பெற்றனர். இதில், நெல்லைச் சுத்தம் செய்தல், உலர்த்துதல், உமி நீக்குதல், அரிசி தீட்டுதல், தரம் பிரித்தல் மற்றும் பொட்டலமிடுதல் போன்ற நவீன அரிசி ஆலை செயல்முறைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், நெல் உமி, அரிசித் தவிடு மற்றும் உடைந்த அரிசி போன்ற துணை பொருட்களின் பயன்பாடுகள் குறித்தும் எடுத்துரைக் கப்பட்டது. அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, அரிசியின் தரத்தைப் பராமரித்தல், சேமிப்பு முறைகள் மற்றும் நவீன இயந் திரங்களின் பயன்பாடு குறித்த நடைமுறை அறிவையும் மாணவர்கள் பெற்றனர். இப்பயிற்சி, வேளாண் மாணவர்கள் நெல் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களை நேரடியாக அறிந்து கொள்ளவும், விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங் களை எடுத்துரைக்கவும் பயனுள்ளதாக அமைந்தது.

தெற்குநத்தம் கிராமத்தில் பருத்தி தண்டு கூன் வண்டு மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு!

விருதுநகர், நவ.16



விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரத்தில் வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், NMV பல்கலைக்கழகம் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவி ரா.துர்கா தேவி, ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, தெற்குநத்தம் கிராமத்தில் விவசாயிகளை நேரில் சந்தித்து பருத்திப் பயிரில் ஏற்படும் தண்டு கூன் வண்டு தாக்குதல் மற்றும் அதன் மேலாண்மை விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இக்கிராமத்தில் பெரும்பாலான விவசாயிகள் பருத்திப் பயிரை முக்கியப் பயிராகச் சாகுபடி செய்து வருகின்றனர். பருத்தி முறைகள் குறித்து சாகுபடியில் விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகளில் தண்டு கூன் வண்டு தாக்குதலும் ஒன்றாகும். அறிகுறிகள், சேதப்படுத்தும் முறை மற்றும் ஒருங் கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், விவசாயிகள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பருத்தி தண்டு கூன்வண்டின் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை முறைகள் அடங்கிய விளக்க கையேடு விநியோகிக்கப்பட்டன. விவசாயி களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு வேளாண் தொழில் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ள நல்ல அனுபவமாக அமைந்தது.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.16 கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 16.11.26 அன்று, ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டாரத்தில் உள்ள கள்ளிப்பாடி, கோதண்டராமாபுரம் மற்றும் கருக்கை ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் சு ஜெய்வேலு, சத்தியநாரயணன் மற்றும் கலைச்செல்வி ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற் கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

மண்ணை வளமாக்கும் பயிர்கள் குறித்து வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கப் பயிற்சி



பெரம்பலூர், நவ.16

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிகுளம் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள் வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெய ஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, மாணவிகள் செட்டிகுளம் கிராம விவசாயிகளுக்கு மண்ணை வளமாக்கும் பயிர்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தனர். மண்ணை வளமாக்கும் பயிர்கள் என்பது மண்ணின் வளத்தை அதிகரித்து, மண்ணின் அமைப்பை மேம்படுத்தி, ஊட்டச்சத்துகளை அதிகரிக்க உதவும் பயிர் களாகும். தக்கைப்பூண்டு, சணப்பை, கொழுஞ்சி, அவரை மற்றும் தட்டைப்பயறு போன்ற பசுந்தாள் உரப் பயிர்கள் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, பயறு வகைப் பயிர்கள் வளிமண்டல நைட்ரஜனை மண்ணில் நிலைநிறுத்த உதவுகின்றன.

இப்பயிர்களைப் பயிரிட்டு, பூக்கும் பருவத்தில் மண்ணில் மடக்கி உழுவதன் மூலம் மண்ணில் அங்ககப் பொருட்கள் அதிகரிக்கின்றன. மேலும், மண்ணின் நீர்ப் பிடிப்புத் திறன் மேம்படுவதுடன், மண்ணில் நுண்ணுயிர்களின் செயல்பாடும் அதிகரிக்கிறது. இதனால் இரசாயன உரங்களின் தேவையைக் குறைத்து, நீடித்த நிலையான வேளாண்மையை மேற்கொள்ள முடியும். இந்தச் செயல்விளக்கப் பயிற்சியின் மூலம் மண்ணை வளமாக்கும் பயிர்களின் வகைகள், அவற்றின் பயன்கள் மற்றும் சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகள் தெளிவாக அறிந்து கொண்டனர்.

ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருப்பத்தூர், நவ.16



திருப்பத்தூர் மாவட்டம், புதூர் பகுதியில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு ஆரோக்கிய மான உணவு பழக்க வழக் கங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நவம்பர் 13ஆம் தேதி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு சத்தான உணவுகளின் முக்கியத்துவம் மற்றும் சமச்சீர் உணவின் அவசியம் குறித்து விளக்கப்பட்டது.

கீரைகள், காய்கறிகள், பழங்கள், சிறுதானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் புரதச்சத்து நிறைந்த உணவுகளை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று எடுத்துரைக் கப்பட்டது. மேலும், துரித உணவுகள், எண்ணெயில் பொரித்த உணவுகள் மற்றும் அதிக சர்க்கரை கொண்ட குளிர்பானங்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

தினமும் சத்தான உணவுகளை உட்கொள்வது, போதுமான அளவு தண்ணீர் குடிப்பது மற்றும் தனிநபர் சுகாதாரத்தைப் பேணுவது குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. இந்நிகழ்ச்சியின் மூலம் மாணவர்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களைப் பின்பற்றி நோயற்ற வாழ்வு வாழ்வதன் அவசியத்தை அறிந்துகொண்டனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



அசேசம் கிராமத்தில் காண்டாமிருக வண்டு வாளி பொறி செயல்விளக்கம்

திருவாரூர், நவ.16

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், அசேசம் கிராமத்தில், RAWE திட்டத்தின் கீழ் காண்டாமிருக வண்டு வாளி பொறி குறித்த செயல்விளக்கத்தை வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் அளித்தனர்.

தென்னை மரங்களைத் தாக்கும் முக்கியப் பூச்சிகளில் காண்டாமிருக வண்டும் (Oryctes rhinoceros) ஒன்றாகும். இவ்வண்டுகள் தென்னை மரத்தின் விரியாத இலைகள் மற்றும் வளர்ச்சி நுனிப் பகுதியைத் தாக்கி சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் தென்னை மரங்களின் வளர்ச்சியும் மகசூலும் பாதிக்கப்படலாம்.

இந்தச் செயல்விளக்கத்தின் போது, காண்டாமிருக வண்டு வாளி பொறியின் அமைப்பு, தயாரிக்கும் முறை, செயல்படும் விதம் மற்றும் நிறுவும் முறை குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டது. பெரோமோன் கவர்ச்சிப் பொருளைப் பயன் படுத்தி வளர்ந்த வண்டுகளைக் கவர்ந்து பொறிக்குள் பிடிக்கும் முறை எடுத்துரைக்கப்பட்டது. மேலும், வாளி பொறியைத் தென்னந்தோப்புகளில் சரியான இடத்தில் நிறுவுதல் மற்றும் அவற்றை முறையாகப் பராமரித்தல் பற்றியும் விளக்கப்பட்டது.

வாளி பொறியின் முக்கிய நன்மைகள்

1. வளர்ந்த காண்டாமிருக வண்டுகளைக் கவர்ந்து பிடிக்க உதவுகிறது.
2. தென்னந்தோப்புகளில் வண்டுகளின் எண்ணிக்கையைக் குறைக்கிறது.
3. பூச்சிகளின் தாக்குதலைக் கண்காணிக்க உதவுகிறது.
4. தென்னை மரங்களின் வளர்ச்சி நுனி மற்றும் விரியாத இலைகளைப் பாதுகாக்க உதவுகிறது.
5. இரசாயனப் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைக்க உதவுகிறது.
6. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைக்கு ஆதரவாக அமைகிறது.
7. சுற்றுச்சூழலுக்கு உகந்த பூச்சி மேலாண்மை முறையாக விளங்குகிறது.

மேலும், பொறியில் சிக்கிய வண்டுகளை அவ்வப்போது அகற்றுதல், கவர்ச்சிப் பொருளை உரிய காலத்தில் மாற்றுதல் மற்றும் பொறியைத் தொடர்ந்து கண்காணித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்தச் செயல்விளக்கத்தின் மூலம், காண்டாமிருக வண்டு களைக் கட்டுப்படுத்துவதில் வாளி பொறியின் பயன்கள் மற்றும் தென்னை மரங்களைப் பாதுகாப்பதற்கான அறிவியல் பூர்வமான பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகள் விழிப்புணர்வும் அறிவும் பெற்றனர்.



NGO இணைப்புப் பயிற்சியில் ஈடுபட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, நவ.16

தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம், திருச்சியைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டமான RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக, திருச்சி மாம்பழச்சாலையில் உள்ள VOICE TRUST தொண்டு நிறுவனத்தில் NGO இணைப்புப் பயிற்சியை மேற்கொண்டனர்.

இப்பயிற்சியின் மூலம் தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகள், கிராமப்புற மக்களின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் சமூக மேம்பாட்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கு குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

மேலும், கிராமப்புற மக்களுடன் இணைந்து பணியாற்றுதல், சமூக நலப் பணிகளில் பங்கேற்றல் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தொண்டு நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்தும் தெரிந்து கொண்டனர்.

இந்த NGO இணைப்புப் பயிற்சி மாணவர்களுக்கு சமூகப் பொறுப்பு, கள அனுபவம் மற்றும் கிராமப்புற வளர்ச்சியில் பங்கேற்பதற்கான வாய்ப்பை வழங்கியது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

புரோ ட்ரே நாற்றங்கால் உற்பத்தி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் மாணவிகள்

மதுரை, நவ.16



மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், பி.முத்து லிங்கபுரம் கிராம ஊராட்சியில் மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ், புரோ ட்ரே நாற்றங்கால் உற்பத்தி பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். புரோ ட்ரே நாற்றங்கால் என்பது பிளாஸ்டிக் நாற்றுத் தட்டுகளைப் பயன்படுத்தி, மண் இல்லாமல் தேங்காய் நார்க்கழிவு போன்ற ஊடகங்களில் காய்கறி மற்றும் மலர் நாற்றுகளை ஆரோக்கியமாக வளர்க்கும் நவீன முறையாகும். இதனால் செடிகளின் சீரான வளர்ச்சி, அதிகபட்ச விதை பயன்பாடு தவிர்ப்பு, வேர்சேதம் குறைவு, நோய்கள் குறைவு, எளிதான இடமாற்றம் மற்றும் குறைந்த நீர் பயன்பாடு போன்ற நன்மைகளை மாணவிகள் எடுத்துரைத்தனர்.

பொதுவாக 98 குழிகள் கொண்ட புரோ ட்ரே தட்டுகளில் நன்கு மக்கிய தேங்காய் நார்க் கழிவுகளை நிரப்பி, குழிக்கு ஒரு விதை வீதம் நட்டு மீண்டும் தேங்காய் நார்க் கழிவுகளைப் பயன்படுத்தி மூட வேண்டும் என்ற விரிவான செயல்முறை விளக்கப்பட்டது. இச் செயல்முறையில் மக்கள் தங்களின் சந்தேகங்களை மாணவி களிடம் கேட்டு தெளிவு பெற்றனர். மேலும் தேங்காய் நார்க் கழிவு களையும் புரோ ட்ரேவையும் மக்களிடத்தில் கொடுத்து அவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு எருக்கம் கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்த செயல்விளக்கம்!

சேலம், நவ.16

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மொரூர் கிராமத்தில் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் சார்பில் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் விவசாயிகளுக்கு எருக்கம் கரைசல் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடு குறித்த செயல்விளக்கம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் எருக்கம் செடியின் இலைகள் மற்றும் தேவையான பொருட்களைக் கொண்டு இயற்கை முறையில் எருக்கம் கரைசல் தயாரிக்கும் முறையை மாணவர்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். மேலும், பயிர்களில் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த இயற்கை முறைகளைப் பயன்படுத்துவதன் அவசியம், கரைசலைத் தயாரிக்கும் முறை, பயன்படுத்தும் விதம் மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினர்.

இச்செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகள் குறைந்த செலவில் இயற்கை இடுபொருட்களைத் தயாரித்துப் பயன்படுத்துவது குறித்து நடைமுறை அறிவைப் பெற்றனர். இந்நிகழ்ச்சி விவசாயிகளிடையே இயற்கை வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

தசகாவ்யா - இயற்கை விவசாயத்தின் பசுமை வளர்ச்சி யூக்கி

தசகாவ்யா (Dasakavya) என்பது இயற்கை விவசாயத்தில் பயன்படுத்தப்படும் ஒரு திரவ உயிரியல் இடுபொருளாகும். இது பத்து வகையான தாவர இலைச்சாறுகளைச் சேர்த்துத் தயாரிக்கப்படும் இயற்கை வளர்ச்சி ஊக்கியாகும். தச காவ்யா என்ற பெயரின் பொருள் தசம் பத்து. காவ்யா பசுவிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் குறிக்கும்.

தசகாவ்யா தயாரிக்கப் பயன்படும் தாவரங்கள்

வேம்பு, எருக்கு, கொளிஞ்சி, நொச்சி, ஊமத்தை, காட்டாமணக்கு, ஆடாதோடை, புங்கம், தும்பை, லந்தானா

தசகாவ்யா தயாரிக்கும் முறை

முதல் நிலை தாவர இலைச்சாறு தயாரித்தல்

தேர்ந் தெடுக்கப்பட்ட தாவரங்களின் இலைகளைத் தனித் தனியாகச் சேகரித்து நறுக்க வேண்டும். ஒரு கிலோ இலைகளுக்கு ஒரு லிட்டர் மாட்டுச் சிறுநீர் என்ற விகிதத்தில் கலந்து பத்து நாட்கள் ஊறவைக்க வேண்டும்.

இரண்டாம் நிலை வடிகட்டுதல்

பத்து நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு தாவரத்திலிருந்தும் கிடைக்கும் கரைசலைத் தனித்தனியாக வடிகட்ட வேண்டும்.

மூன்றாம் நிலை பஞ்சகவ்யாவுடன் கலத்தல்

ஐந்து லிட்டர் பஞ்சகவ்யா கரைசலில் ஒவ்வொரு தாவரத்தின் வடிகட்டிய சாற்றையும் ஒரு லிட்டர் என்றளவில் சேர்க்க வேண்டும்.

நான்காம் நிலை நொதித்தல்

அனைத்துப் பொருட்களையும் நன்றாகக் கலந்து இருபத்தைந்து நாட்கள் வைத்திருக்க வேண்டும். இந்தக் காலத்தில் கரைசல் நன்றாகக் கலக்கும் வகையில் அவ்வப்போது கிளற வேண்டும்.

தசகாவ்யாவின் பயன்பாடுகள்



பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க உதவுகிறது. பயிர்களின் மகசூல் மற்றும் தரத்தை மேம்படுத்த உதவுகிறது. இலைகளின் வளர்ச்சிக்கும் தாவரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் துணை புரிகிறது. அசுவினி, இலைப்பேன், சிலந்திப் பேன் போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவுகிறது. இலைப்புள்ளி நோய், இலைக்கருகல் நோய் மற்றும் சாம்பல் நோய் போன்ற சில நோய்களின் தாக்கத்தைக் குறைக்க உதவுகிறது. இயற்கை விவசாயத்தில் பயன்படுத்தக்கூடிய திரவ இடுபொருளாக விளங்குகிறது.

தசகாவ்யாவைப் பயன்படுத்தும் முறை

தசகாவ்யா கரைசலை நன்றாக வடிகட்டி பயன்படுத்த வேண்டும். இலைவழித் தெளிப்பிற்கு மூன்று விழுக்காடு கரைசல் பரிந்துரைக்கப்படுகிறது. விதைகளை விதைப்பதற்கு முன்பு மூன்று விழுக்காடு கரைசலில் இருபது நிமிடங்கள் ஊற வைக்கலாம். நாற்றுகளை நடவு செய்வதற்கு முன்பு அவற்றின் வேர்களை மூன்று விழுக்காடு கரைசலில் இருபது நிமிடங்கள் நனைக்கலாம். காய்கறிகள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் பயிரின் வளர்ச்சிக் காலத்தில் வாரம் ஒரு முறை தெளிக்கலாம்.

தகவல் : ***வி.நூதனாஸ்ரீ, IV B.Sc (Hons.) Agriculture, IART, NMV University, Aruppukottai, Viruthunagar.***

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333